**அவசர வடக்கு மீளமைத்தல் செயற்திட்டத்தின் (ஈஎன்ஆர்ஈபீ) 2014 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அவசர வடக்கு மீளமைத்தல் செயற்திட்டத்தின் (ஈஎன்ஆர்ஈபீ) 2014 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடீஏ) இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆந் திகதிய 4676-எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையின் II பீ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

செயற்திட்ட நிதியளித்தல் உடன்படிக்கையின் படி, தற்போது கொள்கை திட்டமிடல், பொருளாதார, சிறுவர், இளைஞர் மற்றும் சலாச்சார அலுவல்கள் அமைச்சாகவுள்ள பொருளாதார அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வடக்கு மாகாண சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. வடமாகாணத்தில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களை (ஐடிபிஎஸ்) அவர்களின் வட மாகாணத்திலுள்ள சொந்த வதிவிடங்களிற்கு உடனடியாக திரும்புவதற்கும் அவர்களுடைய சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையை மீள கட்டியெழுப்புவதற்கும் இலங்கை அரசாங்கத்தினுடைய முயற்சிகளிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. நிதியளிப்பு உடன்படிக்கையின்படி, செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 7,532.27 மில்லியன் தொகைக்குச் சமனான எஸ்டிஆர் 40.9 மில்லியனானதுடன் (ஐ.அமெ.டொ. 65.19 மில்லியன்) அதில் ரூபா 7,510 மில்லியனுக்குச் சமனான ஐ.அ.டொ. 65 மில்லியனை நிதியளிப்பதற்கு சர்வதேச அபிவிருத்தி சங்கம் உடன்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நிதியளித்தல் உடன்படிக்கையின் படி, செயற்திட்ட செயற்பாடுகள் திரும்புவோருக்கான அவசர உதவிகள், அத்தியாவசிய பொதுமக்கள் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பும் புனர்நிர்மாணமும் மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம், மேற்பார்வை, கண்காணிப்பு, மதிப்பாய்வு மற்றும் விசேட கற்கைகள் போன்ற 03 பிரதான பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2010 சனவரி 11 இல் தொடங்கியிருந்ததுடன் 2012 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது. அதன் பின்னர் செயற்திட்டக் காலம் 2014 ஏப்ரல் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியளிப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஊ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஏ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 ஏப்ரல் 30 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 ஏப்ரல் 30 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) மீளளித்தல்களிற்கு ஆதாரமானவையாக நிதியளித்தல் உடன்படிக்கையில் விதந்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் காணப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்படப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டிற்கான நிதியங்களின் நிதியளிப்பு, பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டிலும் 2014 ஏப்ரல் 30 வரையிலுமான நிதிகளின் பயன்பாடு என்பற்றுடன் தொடர்புடைய சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மூலங்கள் | நிதியளித்தல் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற் கான பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | பயன்படுத்திய நிதிகள் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண் டின் போது | 2014 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். | ரூபா மில். | ரூபா மில். | ஐ.அ.டொ. மில். | ரூபா மில். |
| ஐடீஏ | 65.00 | 7,510 | 430 | 377 | 65 | 7,489 |
| ஜீஓஎஸ்எல் | 0.19 | 22 | 9 | 9 | - | 21 |
| மொத்தம் | 65.19 | 7,532 | 439 | 386 | 65 | 7,510 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

செயற்திட்டத்தின் கீழான அவசர உதவிச் செயற்பாடுகளும் உட்கட்டமைப்பு வேலைகளின் மீள் புனர்நிர்மான மற்றும் புனரமைத்தல்களும் செயற்திட்டக் காலமுடிவில் உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பூரணப்படுத்தப்பட்டிருந்தன. இருப்பினும், நெடுங்கேணியில் உள்ள பயிற்சி நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்ட கராஜ், மரிச்சுக்கட்டியிலுள்ள உரக் களஞ்சியம் என்பன குறித்த நோக்கங்களிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காமை கணக்காய்வு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையில் வெளிப்பட்டிருந்தது. மேலும், பௌதீக பரிசோதனைகளில் வவுனியாவிலுள்ள நெடுங்கேணியிலும் புளியங்குளத்திலும் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகள், யாழ்ப்பாண மருதங்கேணி பிரதேச செயலகத்தின் கட்டிட மீள் புனரமைப்பு வேலைகள் மற்றும் மருச்சுக்கட்டி கமநல சேவைகள் நிலையத்தினதும் மன்னார் முசலி பிரேதச சபை கட்டிடத்தினதும் புதுப்பித்தல் வேலைகளில் குறைபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவ்வாறான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர்களிற்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டமையினை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை.

**3.3 செயற்திட்டச் செயற்பாடுகளை முடிவுறுத்தல்**

---

செயற்திட்டச் செயற்பாடுகள் 2014 ஏப்ரல் 30 ஆந் திகதியன்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், செயற்திட்ட முடிவுறுத்தல் அறிக்கை 2015 ஏப்ரல் 30 வரையிலும் கூட சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. கிடைக்கக் கூடியதாகவிருந்த தகவல்களின் படி, செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவருக்கு மாற்றப்பட்டிருந்தன. இருப்பினும், சொத்துக்களை கையளித்தல் பட்டியல்களில் பதிவுசெய்யப்பட வேண்டிய சொத்துக்களை இணங்காணக்கூடிய இலக்கங்கள் மற்றும் சொத்துக்களின் கிரயங்கள் போன்ற தேவையான விபரங்கள் இன்மை காரணமாக அவ்வாறான சொத்துக்களின் உள்ளமையினையும் பயன்பாட்டினையும் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை.